# சங்க இலக்கியங்களில் புலவர்களின் வெளிப்பாட்டுத்திறன்: நற்றிணையை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு

யூசுப். எம். அஸ்றப்*

**ஆய்வுச் சுருக்கம்.**

உலக மொழிகளில் இலக்கிய வளம் பெற்ற மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. தமிழ் மொழியில் காலத்தால் முந்திய இலக்கியங்களாகக் கருதப்படுபவை சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் பற்றி பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் இடம்பெற்று வந்துள்ளன. காலத்தின் தேவைக்கு ஏற்ப பண்டைய இலக்கியங்களை புதிய சிந்தனைகளின் ஊடாக பார்க்க வேண்டியுள்ளது. இந்த ஆய்வானது சங்க இலக்கியங்களில் புலவர்களின் வெளிப்பாட்டுத்திறனை நற்றிணைப் பாடல்களின் ஊடாக தேடும் ஒரு முயற்சியாக அமைகின்றது. சங்க அகப்பாடல்கள் அகமாந்தர்களின் உணர்வுகளையும் அவை தோன்றும் பின்புலங்களையும் முதன்மைப்படுத்தி நிற்கின்றன. சங்கப்புலவர்கள் அகமாந்நர்களின் உணர்வுகளை பல்வேறு உத்திகளைக் கையாண்டு வெளிப்படுத்தியிருக்கின்றனர். சிறப்பாக கூற்றினைக் கூறும் முறையால் கேட்போருக்கு தம் உணர்வுகளைத் தெரியப்படுத்துதல் என்பது முதன்மை பெறுகின்றது. இதில் உவமை, உள்ளுறை, இறைச்சிப்பொருள், வெளிப்படையாகக்கூறி உணர்த்தல் போன்ற உத்திகள் கையாளப்படுகின்றன. சங்கப் புலவர்கள் கையாண்ட வெளிப்பாட்டுத்திறன் உத்திகள் தற்கால நவீன கவிதைகளில் படிமம், குறியீடு, உருவகம் போன்ற உத்திகளாகப் பேசப்படுகின்றன. படிமம், குறியீடு போன்ற சொற்கள் சங்க காலத்தில் பயன்பாட்டில் இருக்கவில்லை. இச்சொற்கள் குறிக்கும் செயற்பாடுகள் சங்கப் புலவர்களால் உவமை, உள்ளுறை, இறைச்சிப்பொருள் போன்ற வெளிப்பாட்டுத்திறன் உத்திகளாகக் கையாளப்பட்டிருக்கின்றன. அந்தவகையிலே அக இலக்கியங்களுள் ஒன்றான நற்றிணையை மூலமாகக் கொண்டு இந்தத் தேடல் அமைகின்றது. இந்த ஆய்வில் விவரண முறை பின்பற்றப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் புலவர்களின் வெளிப்பாட்டுத் திறன்களை இணங்காண்பதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. பாத்திரங்கள் ஊடாக வெளிப்பாட்டுத்திறன் ஐவகை நிலங்களின் ஊடாக வெளிப்பாட்டுத்திறன் நவீன கவிதைகளில் இவற்றின் கையாளுகை போன்ற பல்வேறு அம்சங்களும் இந்த ஆய்வின் ஊடாக இணங்காணப்பட்டுள்ளது. ஆய்வினை செம்மையுறச் செய்வதற்கு இது தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் என்பனவும் துணைச்சான்றுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** வெளிப்பாட்டுத்திறன், நற்றிணை, ஐவகை நிலங்கள், அகமாந்தர்கள், சங்கப்புலவர்கள்

To whom correspondence should be addressed: ymashraff@gmail.com

*Lecturer, Kopay Teachers' College